தினமலர் மதுரை 14-11-2013

சொல்கிறார்கள்



# தன்னம்பிக்'கை' உள்ளது!

**இடதுகை ஊனமாக இருந்தும், பல மாற்றுத்திறனாளி பெண்களின் வாழ்க்கை மேம்பட உதவியதற்கு, ஜனாதிபதியிடமிருந்து விருது பெற்ற, அமுத சாந்தி:** நான், மதுரை, மணிநகரை சேர்ந்தவள். பிறவியிலேயே, இடதுகை ஊனமாக இருந்ததால், என்னுடன் படித்த குழந்தைகளின் ஏளனப் பார்வை மற்றும் பரிகாசப் பேச்சு, அந்த சிறுவயதிலேயே என் மனதை பெரிய அளவில் பாதித்தது.

எனவே, குடும்ப வறுமையிலும் எப்படியாவது படித்து, வாழ்க்கையில் முன்னேற எண்ணி, இலவச விடுதியில் தங்கி, பள்ளி படிப்பை முடித்தேன். தூத்துக்குடி ஏ.பி.சி., மகாலட்சுமி கல்லூரி உதவியுடன், இலவசமாக, பி.காம்., படித்தேன்.

தொலைதூர கல்வியில், வங்கியியல் மேலாண்மை படிக்கும் போதே, கம்ப்யூட்டரும் கற்று, மதுரையின் சில அலுவலகங்களில், 'அக்கவுன்ட்ஸ்' துறையில் வேலை செய்தேன்.

மாலை மற்றும் விடுமுறை நாட்களில், என்னை போன்ற மாற்றுத்திறனாளி பெண்களை சந்தித்து, அவர்களின் கஷ்டத்தை அறிந்தேன்.

மாற்றுத்திறனாளிகளையும் சுயதொழில் செய்ய கற்று தந்து, நாலு காசு சம்பாதிக்க வைத்தால் தான், அவர்களின் வாழ்க்கை தரம் உயரும் என, எண்ணினேன். தையல் தெரிந்ததால், மூன்று தையல் மிஷின்கள் வாங்கி, வீட்டிலேயே இலவச பயிற்சியளித்தேன்.

மேலும், மதுரையை சுற்றியுள்ள, 55 கிராமங்களில் உள்ள மாற்றுத்திறனாளி பெண்களுக்கு, சுயதொழில் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தியதுடன், அரசின் நல உதவிகளையும் இலவசமாக பெற்று தந்தேன்.

என் பணியை பாராட்டிய ஒருவர், 10 தையல் மிஷின் வாங்கி தந்ததால், இலவச தொழிற் பயிற்சியை விரிவாக்கம் செய்யும் எண்ணத்தில், 2006ல், 'தியாகம் பெண்கள் அறக்கட்டளை' ஆரம்பித்து, சிறப்பாக நடத்தி வருகிறேன். என்னிடம் பயிற்சி பெற்ற பலர், சுயமாகவும், தொழில் நிறுவனங்களிலும் வேலை செய்து வருகின்றனர்.

கடந்த, 2003ல், கவர்னர் ராம்மோகன் ராவ் மற்றும், 2008ல், கவர்னர் பர்னாலாவும், என் பணியை பாராட்டி விருது தந்தனர். 2008ல், அப்துல் கலாம் ஜனாதிபதியாக இருந்த போது, அவரிடமும் விருது பெற்றுள்ளேன். கை இல்லையெனினும், தன்னம்பிக்'கை' உள்ளது.